ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1533/15 - 2008 ජනවාරි 25 වැනි සිකුරාදා - 2008.01.25

1533/15 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*பணிப்புரை இல. 19*

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டம்**

*10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 10 (1) (ஆ) (ii) இன் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, மனித நுகர்வுக்கு உகந்த, விலங்குணவு தயாரிப்பிற்கு நேரடியாக அன்றேல், விலங்குணவு தயாரிப்பிற்கான உள்ளடக்கமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் அரிசி அல்லது நெல்லினை தயாரிப்பாளர், வியாபாரி அல்லது விநியோகஸ்தர் எவரும் விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்குவிடவோ அல்லது விற்பனைக்கு கோரவோ, களஞ்சியப்படுத்தவோ, கொண்டு செல்லவோ, விநியோகிக்கவோ அல்லது வாங்கவோ அல்லது கொள்வனவு செய்யவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.*

*இப்பணிப்புரையானது, 2008, சனவரி 25 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.*

*பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி.,*

*ரூமி மர்சூக்,*
*தவிசாளர்.*

*கொழும்பு - 01,*
*2008, சனவரி 24.*

*02- 284/1*